Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 · நடுநிலை நாளிதழ் · ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 · இதழ் Issue : 71 · சனிக்கிழமை Saturday · 10.01.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# “சென்சார் போர்டும் பா.ஜ.க. அரசின் புதிய ஆயுதமாக மாறியுள்ளது”

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கண்டனம்



'ஜனநாயகன்' படத்திற்கு சென்சார் சான்றிதழ் வராதது, பல வசனங்களை மாற்றியும், காட்சிகளையும் நீக்கி 'பராசக்தி' படத்திற்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள நிலையில், சென்சார் போர்டை முதலமை ச்சர் மு.க. ஸ்டாலின் கண்டித்துள்ளார்.

சுதா கொங்கரா இயக்கத்தில், சிவகார்த்திகேயன், ஸ்ரீலீலா, ரவி மோகன், அதர்வா உள்ளிட்ட நட்சத்திர பட்டாளங்கள் நடித்துள்ள 'பராசக்தி' திரைப்படம் நாளை திரைக்கு வரவுள்ளது.

ரிலீஸ் தேதி நெருங்கினாலும், சென்சார் கிடைக்காத சூழலில் இப்படம் திட்டமிட்டபடி திரைக்கு வருமா என்ற கேள்வி ரசிகர்கள் மத்தியில் எழுந்தது.

இந்நிலையில், 25 மாற்றங்களுடன் 'பராசக்தி' திரைப்படத்திற்கு தணிக்கைகுழு U/A16+ சான்றிதழ் அளித்துள்ளது. அதன்படி, 'தீ பரவட்டும்' என்ற காட்சி 'நீதி பரவட்டும்' எனவும், 'ஹிந்தி அரக்கி' என்பதற்கு பதிலாக 'அரக்கி' எனவும், 'இந்திஎன்கனவை அழித்தது' என்ற வசனம், என் ஒரேகனவை இந்தி திணிப்பு எரித்தது என்றும் மாற்றம் செய்யப்பட்டு நாளை திரையில் வரவுள்ளது.

அதேபோல், விஜய் நடித்துள்ள ஜனநாயகன் படத்தை ஹெச். வினோத் இயக்கியுள்ளார். இப்படம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்று (ஜன.9) திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால் சென்சார் சான்றிதழ் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டது. தணிக்கை குழுவை சேர்ந்த ஒருவர் ஆட்சேபனை தெரிவித்ததால், சென்சார் சான்றிதழ் கிடைப்பதில் சிக்கல் எழுந்தது. இதையடுத்து, 'ஜனநாயகன்' திரைப்படத்திற்கு தணிக்கை சான்றிதழை விரைவில் வழங்க உத்தரவிடக் கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் கேவிஎன் தயாரிப்பு நிறுவனம் வழக்கு தொடுத்தது

இந்த வழக்கில் தனி நீதிபதி படத்திற்கு சான்றிதழ் வழங்க உத்தரவிட்ட நிலையில், சென்சார் போர்ட் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதனை விசாரித்த தலைமை நீதிபதி, தனி நீதிபதி உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்து வரும் 21ஆம் தேதி வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சென்சார் போர்டுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். அது தொடர்பாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில், "CBI, ED, IT வரிசையில் சென்சார் போர்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் புதிய ஆயுதமாக மாறியுள்ளது. கடுமையான கண்டனங்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க. பா.ஜ.க தொகுதி பங்கீடு பேச்சு: எடப்பாடி பழனிசாமி உடன், நயினார் நாகேந்திரன் சந்திப்பு



சென்னை: பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து ஆலோசனை நடத்தினார். இதில் தொகுதிப்பங்கீடு குறித்து ஆலோசனை நடத்தியதாக நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 2026 சட்டமன்ற தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள், பிரச்சாரம், பொதுக்கூட்டம், கூட்டணி தொகுதி பங்கீடு என தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தி வருகின்றன. அந்த வகையில், அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாமக இணைந்துள்ளது. அதிமுக-பாஜககூட்டணியில் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கிய நிலையில், எடப்பாடி பழனிசாமி சமீபத்தில் டெல்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில், சென்னை பசுமைவழிச்சாலையில் உள்ள அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்தார். அப்போது, பாஜக மாநில துணைத் தலைவர்கள் ஜெயபிரகாஷ், ராமலிங்கம் உள்ளிட்டோரும் உடனிருந்தனர். அதிமுக - பாஜக இடையேயான தொகுதி பங்கீடு குறித்த முதற்கட்ட பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளது.

சந்தித்தார். அப்போது அவர், "தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தை சுமூகமாக முடிந்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தமிழகம் வருகை குறித்து ஆலோசிக்கப்பட்டது. அவர் தமிழகம் வரும் தேதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை" என தெரிவித்தார்.

பாஜக கோரும் தொகுதிகள்?

பாஜகவை பொறுத்தவரை, தங்களுக்கு விருப்பமான தொகுதிகளை அதிமுகவிடம் கோரும். குறிப்பாக, கோவை, திருப்பூர், ஈரோடு மேற்கு, தென் மாவட்டங்களில் சில தொகுதிகள் மற்றும் சென்னையில் சில தொகுதிகளை பாஜக கோரும் எனத் தெரிகிறது.

முன்னதாக, கடந்த டிசம்பர் 23 ஆம் தேதி தமிழ்நாட்டிற்கு வந்த பாஜகவின் தேர்தல் பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான பியூஷ் கோயல், எடப்பாடி பழனிசாமியை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இணைய வாய்ப்புள்ள நிலையில், மற்ற கட்சிகளுடன் கூட்டணி இறுதி செய்யப்பட்ட பிறகே, அதிமுக -பாஜக இடையேயான தொகுதி பங்கீடு இறுதி வடிவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# த.வெ.க. சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு; தலைவர் விஜய் அறிவிப்பு



சென்னை,

சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில், அதனை எதிர்கொள்வதற்கான ஆயத்தப் பணிகளில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில், சட்டமன்ற தேர்தலுக்கான தேர்தல் அறிக்கை தயாரிக்க 10 பேர் கொண்ட குழுவை அமைத்து தவெக தலைவர் விஜய் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக விஜய் வெளியிட்டுள்ள அறிவிப்பு பின்வருமாறு;

அனைவருக்கும் வணக்கம். தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்தையும் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு, நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட இருக்கிறது. இதற்காகச் சிறப்புக் குழு அமைக்கப்படுகிறது. இந்தக் குழு, தமிழகம் முழுவதும் பொதுமக்கள், சிறு, குறு தொழில் அமைப்புகள், தொழிலாளர் அமைப்புகள், பொருளாதார & தொழில் வல்லுனர்கள், வர்த்தக சபைகள், பல்வேறு ஊழியர் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மகளிர் அமைப்புகள், இளைஞர் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கருத்துகளையும் தேவைகளையும் அறிந்து, தரவுகளைப் பெறவுள்ளது.

தேர்தல் அறிக்கைக் குழு விவரம்:

1. Dr. K.G. அருண்ராஜ் MBBS., Ex. IRS.

2. J.C.D.பிரபாகர் BA. BL., Ex. MLA.

3. A.ராஜ்மோகன் BTech. IT.

4. T.S.K. மயூரி MA.

5. பேராசிரியர். A. சம்பத்குமார் MBA., M.Phil., Ph.D.சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில், அதனை எதிர்கொள்வதற்கான ஆயத்தப் பணிகளில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில், சட்டமன்ற தேர்தலுக்கான தேர்தல் அறிக்கை தயாரிக்க 10 பேர் கொண்ட குழுவை அமைத்து தவெக தலைவர் விஜய் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக விஜய் வெளியிட்டுள்ள அறிவிப்பு பின்வருமாறு;

6. M.அருள் பிரகாசம் M.Com.

7. விஜய் R. பரணிபாலாஜி BA.LLB.

8. J.முகமது பர்வேஸ் B.A., LLB (HONS).

9. Dr. TK. BDS., MSD., MSC., ICDI., FICOI.

10. K. கிறிஸ்டி பிருத்வி BE. MBA.

11. M.K. தேன்மொழி பிரசன்னா B.Tech IT.

12. வழக்கறிஞர் M.சத்யகுமார் LLM, ACA, ACMA, ACS, CIMA-ACMA(UK), CGMA(US), CISI-ACSI(UK), MA(Eco), PhD.

மேற்கண்ட குழுவினருக்குக் கழகத் தோழர்கள் முழு ஒத்துழைப்பு நல்குவதோடு, அந்தந்தப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட அமைப்புகளைச் சந்திக்கும் பொழுது தேவையான உதவிகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செய்திகள் உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# வானிலை முன்னெச்சரிக்கை: தமிழகத்தின் 14 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு!



சென்னை:

வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை (ஜன.10) கரையை கடக்கும் நிலையில், தமிழகத்தில் நாகப்பட்டினம் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில், இலங்கை மட்டகளப்புக்கு தென்கிழக்கே சுமார் 170 கிமீ தொலைவிலும், சென்னைக்கு தென்கிழக்கே 710 கிமீ தொலைவிலும் நிலை கொண்டுள்ளது. வடமேற்கு திசையில் நகர்ந்து, வடக்கு இலங்கை கடலோரப்பகுதிகளில், திரிகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் இடையே நாளை பிற்பகல் அல்லது மாலை கரையை கடக்கக்கூடும்.

இதன் காரணமாக நாளை (ஜன.11) தமிழக கடலோர பகுதிகளில் பெரும்பாலான இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 11-ம் தேதி வட தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

12-ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 13 முதல் 15-ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் நாளை (ஜன.10) கன முதல் மிக கனமழையும், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை சூறாவளி க்காற்று மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 65 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும்.



சேலம் மாவட்டம் தொளசம்பட்டியில் திமுக முன்னாள் மாவட்ட கவுன்சிலர் KSR. சண்முகம் அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டடப்பது. இந்த நிகழ்வில் திமுக ஓமலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் ACM. செல்வகுமாரன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி இராவத்தநல்லூரில் ரூ.9.13 லட்சம் மதிப்பில் நியாய விலை கடை திறப்பு



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட 5-வது வார்டு இராவத்தநல்லூரில் 9.13 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

இராவத்தநல்லூர் 5-வது வார்டில் 150 க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். இவர்களின் நீண்ட நாள் கோரிக்கையாக புதிய நியாய விலை கட்டிடம் வேண்டுமென அப்பகுதி பொதுமக்கள் அதிமுக கிளை செயலாளர் ஆசிரியர் து.தனசேகரிடம் ஆலோசனை மேற்கொண்டனர். மேலும் ஆலோசனைப்படி மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேலுவிடன் பொதுமக்கள் கோரிக்கை மனு வழங்கினர். கோரிக்கை மனுவை ஏற்ற மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 9.13 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது.

இதன் திறப்பு விழா நேற்று இராவத்தநல்லூர் 5-வது வார்டில் மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் அச்சிறுப்பாக்கம் பேரூர் கழக செயலாளர் ஏ.இ.முருகதாஸ்தலைமை தாங்கினார். இராவத்தநல்லூர் 5-வது வார்டுகிளைச் செயலாளர் ஆசிரியர் து தனசேகரன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் கோகுலகிருஷ்ணன்தகவல் தொழில்நுட்ப பிரிவு சரவணக்குமார்,பத்திர எழுத்தர் கஜேந்திரன்,இளைஞர் இளம் பெண்கள் பாசறை து.தேவி, கோதண்டம், நீலமேகம், இராமலிங்கம், கிருஷ்ணமூர்த்தி,சீதாராமன், முகமது ஜெ.இத்ரிஸ், வெங்கடகிருஷ்ணன், மோகன்,சக்திவேல்,மன்ற உறுப்பினர் ஆனந்த்

மகளிர் அணி சங்கீதா ரஜினி, உட்பட கழக நிர்வாகிகள் கிராம பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்.



தேவகோட்டை சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில்சமத்துவ பொங்கல் விழாநடைபெற்றது. பள்ளிதலைமைஆசிரியர் லெ.சொக்கலிங்கம்தலைமையில்ஆசிரியர்கள்,சத்துணவுஊழியர்கள்சக்கரைபொங்கல், சாம்பார் சாதம் சமைத்து மாணவர்களுக்கு வழங்கினார்கள் .பொங்கல் கோலம் ,விளையாட்டு, பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.நிகழ்விற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் ஸ்ரீதர், முத்துலெட்சுமி , முத்துமீனாள் ஆகியோர் செய்து இருந்தார்கள். இந்நிகழ்வில் ஏராளமான பெற்றோர்களும் பங்கேற்றனர்.

# வல்லம் அன்னை தெரேசா ஆர். சி. மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதி வண்டி வழங்கும் விழா



தென்காசி மாவட்டம் செங்கோட்டை அடுத்துள்ள வல்லத்தில் இயங்கி வரும் அன்னை தெரேசா ஆர் சி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 110 மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை மூலமாக வழங்கப்படும் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தென்காசி மேற்கு ஒன்றிய செயலாளர் வல்லம் திவான் ஒலி தலைமை வகித்தார். பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆரோக்கியராஜ்வருகைதந்தஅனைவரையும் வரவேற்று பேசினார்.

இப்பள்ளியானது வல்லம் பகுதியில் அதிகமான மாணவ மாணவிகள் கல்விப் பயன் அளித்து வருவதில் சிறந்த பள்ளியாக திகழ்ந்து வருகிறது. இந்தப் பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை மாணவ மாணவிகள் சிறந்த கல்வியும் நல் ஒழுக்கத்தையும் இந்த பள்ளியின் ஆசிரியர் பெருமக்கள் மாணவ மாணவிகளுக்கு கல்வியை அளித்து வருகின்றனர். இங்கு சுமார் 900 பேர் படித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பள்ளியின் நிர்வாகியாக அருட்பணி. விசுவாசம் அடிகளார் பணியாற்றி வருகிறார். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக தென்காசி தெற்குமாவட்டசெயலாளர் வே. ஜெயபாலன் கலந்துகொண்டுவிலையில்லாமிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய பெருந்தலைவர் ஷேக் அப்துல்லா, கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் குணசேகரன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் இசக்கி பாண்டியன், மாவட்ட தொழில்நுட்பஅணிஅமைப்பாளர் அழகு தமிழ், சங்கர், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் தர்ம செல்வி, விவசாய அணி துணை அமைப்பாளர் அண்ணாவி,

கிளைக் கழகச் செயலாளர் ராஜா, முத்துக்குமார், செல்வம், ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் ஆவுடையம்மாள், ஜமீன் பாத்திமா, ஒன்றிய பிரதிநிதி சாகுல் ஹமீது, வல்லம் செல்வம் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.



# கோவையில் ஜெம் அறக்கட்டளை சார்பில் பெண்களுக்கான மாரத்தான் போட்டிக்கான டி சர்ட் மற்றும் பதக்கங்கள் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது

## கோவை மாநகர காவல் ஆணையர் கண்ணன் டி சர்ட் மற்றும் பதக்கங்களை அறிமுகப்படுத்தி வைத்தார்

ஜெம் அறக்கட்டளை சார்பில் கோயம்புத்தூர் மகளிர் மாரத்தான் போட்டியின் 3வது பதிப்பு வரும் பிப்ரவரி மாதம், 22ம் தேதி ஜெம் மருத்துவமனை வளாகத்தில் காலை 5.30 மணிக்கு நடைபெற உள்ளது. தமிழ்நாடு தடகள சங்கத்தின் அங்கீகாரம் பெற்று, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை அளிக்க இந்த போட்டிகள் நடைபெற உள்ளது. டி சர்ட் வெளியிடுவிழா மற்றும் லோகோ அறிமுக நிகழ்ச்சி இன்று கோவை காவல் ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்றது . இதனை கோவை மாநகர ஆணையாளர் கண்ணன் வெளியிட்டார். ஜெம் மருத்துவமனை தலைவர் டாக்டர்.சி. பழனிவேலு மற்றும் மருத்துவமனை செயல் அதிகாரி டாக்டர் பிரவீன் ராஜ் ஆகியோர் இது குறித்து செய்தியாளர்களிடம் கூறியதாவது.. ஜெம் அறக்கட்டளை, கடந்த 25 ஆண்டுகளாக பல்வேறு மருத்துவ முகாம்கள், ஏழை எளிய மக்களுக்கு இலவச அறுவை சிகிச்சைகள், புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரங்கள், மாணவர்களுக்கு கல்வி உதவிகள் போன்றவற்றின் மூலம் சமூகத்திற்கு சேவை செய்து வருகிறது. ரோட்டரி கிளப் மற்றும் மெட்ரோபோலிஸ் அமைப்பின் மூலம் 100 நோயாளிகளுக்கு சுமார் 3 கோடி மதிப்பிலான அறுவை சிகிச்சைகள் ஜெம் மருத்துவமனையில் இலவசமாக செய்யப்பட்டுள்ளது மகளிருக்கான மாரத்தான் போட்டி ஜெம் மருத்துவமனை வளாகத்தில் வரும், பிப்ரவரி மாதம், 22ம் தேதி நடைபெற உள்ளது. 3கி.மீ, 5கி,மீ, மற்றும் 10 கிமீ மற்றும் 21 கிமீ என நான்கு பிரிவுகளாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இதுவரையிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பதிவு செய்துள்ளனர். சுமார் 10000க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என தெரிவித்தனர்மேலும்,ஓட்டப்பந்தய வீரர்களுக்கு தேவையான பாதுகாப்பை காவல்துறை மற்றும் அமைப்பாளர்கள் உறுதி செய்துள்ளதாகவும்

ஜெம் அறக்கட்டளையானது பெண்களின் பாதுகாப்பு மற்றும் சுய மேம்பாட்டை ஊக்குவிக்கும் விதமாக இந்த நிகழ்ச்சியானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பகல், இரவு என எந்த நேரத்தையும் பொருட்படுத்தாமல் பெண்கள் நடமாட ஒரு பாதுகாப்பான நகரத்தை உருவாக்குவது இதன் நோக்கமாக உள்ளது என தெரிவித்தார்.

# ஈரோடு பனியன் ஜவுளி வியாபார சங்கத் தேர்தல்: செயலாளர் பதவிக்கு அரிமா அன்பழகன் வேட்புமனு தாக்கல்



ஈரோடு பனியன் ஜவுளி வியாபார சங்கத்தின் புதிய நிர்வாகப் பொறுப்பாளர்களுக்கானதேர்தல்அறிவிக்கப்பட்டு,தற்போது தேர்தல் பணிகள் விறுவிறுப்பாகத் தொடங்கியுள்ளன. இதனைத் தொடர்ந்து, ஈரோடு பனியன் ஜவுளி சங்கத்தின் செயலாளர் பொறுப்பிற்கு போட்டியிட ஈரோடு ஸ்ரீ பாலமுருகன் டெக்ஸ் உரிமையாளர் அரிமா அன்பழகன் விருப்பம் தெரிவித்துள்ளார். இதற்கான வேட்பு மனுவை, திருப்பூரில் உள்ள சங்கத்தின் அலுவலகத்தில் தேர்தல் அதிகாரியும் சங்கத்தின் ஆடிட்டருமான மூர்த்தி அவர்களிடம் நேரில் சந்தித்து தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், முக்கிய நிர்வாகப் பொறுப்புகளுக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது ஆதரவாளர்களுடன் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# கோவையில், கோ கிளாம் பொங்கல் பண்டிகை சிறப்பு விற்பனை கண்காட்சி



கோவையில்,ஜனவரி 9 ந்தேதி துவங்கி மூன்று நாட்கள், கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள சுகுணா மண்டபத்தில் நடைபெற உள்ளது. இதில் சிறப்பு தள்ளுபடி விற்பனை நடைபெறுவதாக விழா ஒருங்கிணைப்பாளர் பேட்டி..

கோவையில்பிரபலகோ கிளாம் விற்பனை கண்காட்சி அவினாசி சாலை நவ இந்தியா பகுதியில் உள்ள, சுகுணா மண்டப அரங்கில் துவங்கியது.

பொங்கல் பண்டிகை சிறப்பு விற்பனை கண்காட்சியாக நடைபெறும் இதில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடை அணிகலன்கள் ,நகைகள் ,சிறப்பு தள்ளுபடியில் விற்பனை செய்யப்படுகின்றன கோவை, மற்றும் அதன் சுற்றுப்புற, பகுதிகளில் உள்ள ஷாப்பிங் செய்யும் பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே பெரும் வரவேற்பை பெற்ற கோ கிளாம் ஷாப்பிங் கண்காட்சி பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வெவ்வேறு பண்டிகை மற்றும் பல்வேறு சீசன்களில் தமது விற்பனை கண்காட்சியை நடத்தி வருகிறது. இந்நிலையில் பொங்கல் பண்டிகை சிறப்பு விற்பனை கண்காட்சியாக கோவை அவினாசி சாலையில் உள்ள சுகுணா மண்டப அரங்கில் கோ கிளாம் தமது விற்பனை கண்காட்சியை துவங்கியது. ஜனவரி 09,10,11,ந்;தேதி வரை மூன்று நாட்கள் நடைபெற உள்ள இதில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள், பரிசு பொருட்கள்,வீட்டு அலங்கார பொருட்கள் என நூறுக்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன குறிப்பாக பொங்கல் பண்டிகை வருவதையொட்டி பெண்களுக்கான பல்வேறு விதமான ஆடைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன-முன்னதாக,

கோ க்ளாம் கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் ஹீனா மற்றும் ராகுல் தலைமையில் நடைபெற்ற கண்காட்சி துவக்க விழாவில்,சிறப்பு விருந்தினர்களாக,வசந்தி,டாக்டர் நந்தினி,ராதிகா,மகாலட்சுமி, ஆர்த்தி,காயத்ரி ,நிவி,மதுகண்ணன்,சஞ்சுக்தா நந்தினி,சந்திரா அக்கா,

ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சியை துவக்கி வைத்தனர்...

கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர்களான ஹீனா மற்றும் ராகுல் ஆகியோர் ஷாப்பிங் கண்காட்சி குறித்து பேசுகையில்,

இந்த ஆண்டு பொங்கல்

சிறப்பு விற்பனை கண்காட்சியாக துவங்கப்பட்டுள்ளதாகவும், ஷாப்பிங் செய்ய வருபவர்களுக்கு தேவையான சிறப்பு தள்ளுபடியுடன் அனைத்து பொருட்களுக்கான அரங்குகளும் இங்கு அமைக்கப்பட்டுள்ளதாகவும்,

குறிப்பாக கண்காட்சியில், பெண்களுக்கான லேட்டஸ்ட் மாடல் ஆடைகள், கொல்கத்தா,லூதியானா,குஜராத், டில்லி,ஜெய்ப்பூர்,புனே என இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பிரத்யேகமாக விற்பனை செய்யபடுவதாக தெரிவித்தார்

# கோவை துடியலூர் அடுத்துள்ள வட்டமலைப்பாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் இஸ்ரேல் பல்கலைக்கழகத்துடன் இணைத்து 36 மணி நேர ஹேக்காத்தான் போட்டிகள் நடத்தினர்



கோவை துடியலூர் அடுத்துள்ள வட்டமலைப்பாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் இஸ்ரேலின் ஏரியல் பல்கலைக்கழகம், இஸ்ரேலின் ப்ரோமிட்டி லிமிடெட் ஆகியோருடன் எஸ்.என். ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்வி நிறுவனங்கள் இணைந்து 36 மணி நேர இஸ்ரேல்-இந்தியா குளோபல் இன்னோவேட்டர்ஸ் ஹேக்கத்தான் 2026 நடத்தியது.

2 நாட்கள் நடைபெற்ற இந்த ஹேக்கத்தான் போட்டியில் சைபர் ரேஸிலின்ஸ், சுஸ்தாயினபிலிட்டி இன்ஜினியரிங் ஃபார் பார்மா அண்ட் பையோடெக்னாலஜி, மற்றும் டைவேர்சிபைடு இன்னோவேஷன்ஸ் ஆகிய 3 முக்கியப் பிரிவுகளில் நடைபெறும் இந்த போட்டிகளுக்கு 1400-க்கும் மேற்பட்ட மாணவ,மாணவிகள் 540-க்கும் மேற்பட்ட அணிகளாக பதிவு செய்தன. பின்னர் நடைபெற்ற தேர்வு செயல்முறைக்குப் பிறகு, 350-க்கும் மேற்பட்ட மாணவர்களைக்கொண்ட 60 அணிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணாபொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் இறுதி ஹேக்கத்தான் சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சிக்கான தொடக்கவிழாவில் எஸ் என் ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர்.சுந்தர் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கி பேசினார்.

இணை நிர்வாக அறங்காவலர் எஸ். நரேந்திரன், அறங்காவலர் வி ராமகிருஷ்ணா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் முதல்வர் டாக்டர் ஏ சவுந்தர்ராஜன் விழாவை ஒருங்கிணைத்து அனைவரையும் வரவேற்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் இந்தியா, இஸ்ரேல் மற்றும் சிங்கப்பூரைச் சேர்ந்த புகழ்பெற்ற சர்வதேச நிபுணர்களின் குழுவை சேர்ந்த நடுவர்கள் இஸ்ரேலின் ஈ ஆர் ஏ ஐ டி ஏ -வைச் சேர்ந்த ராமி இட்ஸெலெவ் மற்றும் டேவ் பெலோஸ்டோட்ஸ்கி, இஸ்ரேலின் ப்ரோமிட்டி லிமிடெட் நிறுவனத்தின் மார்க் மெலாமெட், இந்தியாவின் பயோஃபார்மாக்ஸ் குரூப் லிமிடெட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சங்கர் மோகன், பாண்டோமாத் நிதிச் சேவைக் குழுமத்தின் இயக்குநர் டாக்டர் பரம்ஜீத் சிங் மகானி,நெஸ்ட்எக்அசெட் மேனேஜ்மென்ட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஊர்வஷ்க் எஃப் தஸ்தூர், சி சி இ -யின் மூத்த ஏஐ விஞ்ஞானி மற்றும் ஆராய்ச்சியாளர் டாக்டர் அர்பித் தீபக் யாதவ், மற்றும் ஐ எஃப் ஐ எம் கல்வி நிறுவனங்களின் டீன் டாக்டர். சலூர் ஸ்ரீகாந்த் பட்நாயக் ஆகியோர் கலந்துக்கொண்டு வாழ்த்துரை வழங்கி பேசினர்.

மேலும் இஸ்ரேலின் ஏரியல் பல்கலைக்கழகத்தின் ரெக்டர் பேராசிரியர். ஆல்பர்ட் பின்ஹாசோவ் மற்றும் இஸ்ரேலின் புரோமிட்டி லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த லெமுயல் மெலமெட் ஆகியோர் இந்தோ-இஸ்ரேல் கல்வி ஒத்துழைப்பு மற்றும் கண்டுபிடிப்பு சார்ந்த தொழில்முனைவின் முக்கியத்துவம் குறித்து பேசினர்.

தொடர்ந்து நடைபெறும் ஹேக்கத்தான் போட்டியில் நிபுணர் குழுவினர் ஒவ்வொரு குழுவிலும் முதல் 2 இடங்களை தேர்வு செய்து வெற்றி பெறுபவர்களுக்குபரிசுகளைவழங்கினர். மேலும் சைபர் கண்டுபிடிப்பு மையத்தில் தேர்வு செய்யப்படுவதற்கும், பயோஃபார்மாக்ஸ் மற்றும் நெஸ்ட் எக் அசெட் மேனேஜ்மென்ட் போன்ற பங்கேற்கும் தொழில்துறைகளிடமிருந்து இன்டர்ன்ஷிப்க்கான வாய்ப்புகள் கிடைக்கப்பெறும். மேலும் இந்த முயற்சி, மாணவர்களுக்கு தொழில்துறை, புத்தாக்க மையங்கள் மற்றும் நீண்டகால தொழில் வழிகாட்டுதலுக்கு உதவியாக இருக்கும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி மாணவர்களை உலகளவில் உயர்த்துவதற்காக இந்த ஹேக்கத்தானை எஸ்.ஆர்.இ.சி கொலப்ரேட்வ் இன்னோவேசன் சென்டர் மற்றும் இன்ஸ்டியூசன் இன்னோவேசன் சென்டர் ஆகியோர் ஏற்பாடு செய்துள்ளனர்.



### தூத்துக்குடி மாநகராட்சி மாநாட்டு மையத்தில்,

## உங்கள் கனவ சொல்லுங்க திட்டத்தை கனிமொழி எம்.பி. துவக்கி வைத்தார்

உங்க கனவ சொல்லுங்க"திட்டத்தில்,தமிழ்நாட்டில் உள்ள சுமார் 1.91 கோடி கிராமப்புற மற்றும்நகர்ப்புறபகுதிகளில் உள்ள குடும்பங்களை சந்தித்து, அவர்கள் பயன்பெற்ற திட்டங்கள் மற்றும் கனவுகளை 50,000 தன்னார்வலர்களை ஈடுபடுத்தி கண்டறிய எடுக்கப்படும் முன் மாதிரி முயற்சியாகும். இந்த களப்பணி தமிழ்நாடு மகளிர்மேம்பாட்டு நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும். "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தினை இன்று (09/01/2026)திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம்,பாடியநல்லூரில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்தொடங்கி வைத்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் அமல்படுத்தப்பட்ட பல்வேறு அரசு திட்டங்களில் பயனடைந்துள்ள பயனாளிகளின் தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும்,அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் "உங்க கனவ சொல்லுங்க" என்ற திட்டத்தினை செயல்படுத்த முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில், தூத்துக்குடி மாநகராட்சி மாநாட்டு மையத்தில், "உங்கள் கனவ சொல்லுங்க" திட்டத்தை திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி துவக்கி வைத்தார். தொடர்ந்து, தன்னார்வலர்களுக்கு கைபேசி இணைப்பு வழங்கினார்.

இந்த நிகழ்வில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஹிந்த் மஸ்தூர் சபா (HMS) தமிழ்நாடு கட்டுமானம் அமைப்பு சாரா தொழிலாளர் பேரவையின் சார்பில் தென்காசி மாவட்ட கண்காணிப்பு குழு அய்யப்பன் தலைமையில் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் அவர்களிடம் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பொங்கல் போனஸ் போன்று அனைத்து கட்டுமான தொழிலாளர்களுக்கும் ரூ.7000 பொங்கல் போனஸ் வழங்க கோரி கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இந்நிகழ்சியில் HMS கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர் பேரவை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஆலங்குளம் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பாக ஒன்றிய கழக பொறுப்பாளர் அண்ணன் சிவக்குமார் தலைமையில் நடைபெற்ற ★சமத்துவம் பொங்கட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்★ என்ற உன்னத நோக்கத்தோடு பொங்கல் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்த மகிழ்வான தருணம்..



தென்காசி ஒன்றிய அ.இ.அ.தி.மு.க. இளைஞர்&இளம் பெண்கள் பாசறை துணை செயலாளர் திருவெற்றியூர் K.ஜோதிராஜ் தமிழக வெற்றிக் கழகத்தின் தென்காசி மேற்கு மாவட்ட செயலாளர் M.நியாஸ்NjsR முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார்.

## உற்பத்தித் திறன் மேம்பாடு மற்றும் இஎஸ்ஜி நடைமுறைகள் குறித்த மாநாட்டை கோவையில் நடத்த திட்டம்



இந்திய அரசின் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில், நாடாளுமன்றச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டபூர்வ அமைப்பான இந்திய அடக்கவிலையியல் கணக்காளர்கள் நிறுவனம் ஐ.சி.எம்.ஏ.ஐ அமைப்பு, தனது 63வது தேசிய அடக்கவிலையியல் மற்றும் மேலாண்மைக் கணக்காளர்கள் மாநாட்டை கோவையில் ஜனவரி 9ம் தேதி முதல் 11ம் தேதிவரைசின்னியம்பாளையம் பகுதியில் நடத்தி வருகின்றது. என்.சி.மேக் 2026, எனும் தலைப்பில் நடைபெறும் இந்மாடாடு ரைஸ் இந்தியா எனும் கரு பொருளில் நடைபெறுகின்றது. இம்மாநாட்டின் மூலமாக, உறுப்பினர்களை மறுநிலைப்படுத்தல்,வளர்ச்சியை தீவிரப்படுத்தல், திறன் வலுப்படுத்தல் மற்றும் திறன்களை மேம்படுத்தல்" என்ற உட்கருத்தின் தலைப்புகளில் இம்மாநாடு நடைபெற உள்ளது. "விக்சித் பாரத் 2047" என்ற இந்தியாவின் தொலைநோக்கு பார்வையின் அங்கமான, அடக்கவிலை போட்டித் திறனை வலுப்படுத்துதல், உற்பத்தித் திறனை உயர்த்தல், சுற்றுச்சூழல் சமூக மற்றும் ஆளுமை நிலைத்தன்மை மற்றும் நடைமுறைகளை செயல்படுத்துதல், தொழிற்புரட்சி 5.0,உலகளாவிய ஆலோசனை சூழல் மற்றும் உருவெடுக்கும் தொழில்நுட்பங்கள், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் தரவு சார்ந்த முடிவெடுக்கும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் சி.எம்.ஏ

உறுப்பினர்களின் முக்கியத்துவத்தை இம்மாநாடு வெளிபடுத்தும் இம்மாநாட்டில் மத்திய, மாநிலப்பொதுத்துறை, தனியார் மற்றும் உயர்கல்வி நிறுமங்கள், உயரிய தணிக்கை-ஆலோசனை நிறுமங்களைச் சார்ந்த சாலச்சிறந்த வல்லுனர்கள், பேச்சாளர்கள் பங்கேற்கேற்க்க உள்ளதாக இது குறித்த செய்தியாளர்கள் சத்திப்பின் பொழுது சி.எம்.ஏ. அமைப்பின் முதன்மை புரவலர் ஸ்ரீனிவாச பிரசாத் தெரிவித்தார்

மேலும் இது குறித்து அவர் கூறியதாவது.

கோவை சின்னியம்பாளையம் பகுதியில் உள்ள மெர்லீஸ் உணவகத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில், தொழில்துறை கூட்டமைப்புகள், அரசு மற்றும் அரசு சாரா ஒழுங்குமுறை அமைப்புகள்,நிதிநிறுவனங்கள், பிற தொழில்முறை அமைப்புகளைச் சேர்ந்த 1000 த்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறதாகவும், மாநாட்டின் நிகழ்ச்சிகள் நேரலையாக வழங்கப்படுகின்றதாகவும், தொழில்முனைவுமனப்பாங்கு, வலுவான தொழில்துறை அடித்தளம், புதுமை சார்ந்த சூழல் ஆகியவற்றில் புகழ்பெற்ற கோவையில், சிறப்பு மிகு இம் மாநாடு நடைபெறுவது பெருமைமிக்க தருணம் என்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உங்க கனவ சொல்லுங்க திட்டத்தின் விண்ணப்பபடிவங்களை தன்னார்வலர்களுக்கு அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்





தமிழ்நாடு முதலமைச்சர் "உங்க கனவ சொல்லுங்க" விரிவான கணக்கெடுப்பு நிகழ்ச்சியினை நேற்று துவக்கி வைத்துள்ளார்கள். பொதுமக்களுடைய உணர்வுகளை தெரிந்துகொண்டு அதன் மூலம் தீர்வு காண இந்நிகழ்ச்சி துவக்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியானது உங்களுடன் ஸ்டாலின், மக்களுடன் முதல்வர் என்ற திட்டங்கள் மூலமாக பலமுறை இந்த மனுக்கள் எல்லாம் வாங்கப்பட்டு ஏறத்தாழ அந்த மனுக்கள் அத்தனைக்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.இத்திட்டங்களை மேம்படுத்துவதற்காககொண்டு வரப்பட்ட திட்டம் தான் உங்கள் கனவை சொல்லுங்கள் என்பதாகும்.

மேலும் பொதுமக்களுடைய தனிப்பட்ட பிரச்சினைகள் மட்டுமல்லாமல், பொதுப்பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் கவனத்திற்கு செல்லப்படும் வகையில்துவக்கிவைக்கப்பட்டுள்ளது.

முதல்வரின் முகவரித் துறை,தமிழ்நாடு மகளிர் மேம்பாடு நிறுவனம், தமிழ்நாடுமின்ஆளுமை முகமை மற்றும் தமிழ் வளர்ச்சி தகவல் துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைத்து இக்கணக்கெடுப்பினை முன்னெடுத்து செயல்படுத்துகின்றன.கணக்கெடுப்பிற்கு சுய உதவிக்குழு உறுப்பினர், குறைந்தபட்சம் பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி, கைபேசி செயலி பயன்படுத்த அறிந்திருத்தல், மற்றும் கணக்கெடுப்பு செய்வதில் விருப்பம் 500 குடும்ப அட்டைக்கு ஒரு தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதன்படி ஈரோடு மாவட்டத்தில் 1,322 தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தன்னார்வலர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாக சென்று படிவம் கொடுத்து அவர்களை பூர்த்தி செய்ய விளக்கம் கொடுக்க வேண்டும். பின்பு இரண்டுநாட்கள் கழித்து குடும்ப உறுப்பினர்கள் இருக்கும் நேரத்திற்கு சென்று அவர்களிடம் உரையாடி விவரங்கள் சேகரிக்க வேண்டும். அதன் பிறகு TNeGA உருவாக்கியகைப்பேசிசெயலியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். தன்னார்வலரின் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் நகர்பகுதிகளில் 50 குடும்பங்களிலும், ஊரக பகுதியில் 30 குடும்பங்களிலும் தகவல்கள் சேகரித்து கைப்பேசியில் உள்ளீடு செய்த பின்னர் உருவாகும் பிரத்தியேக எண்ணை கனவு அட்டையில் எழுதி புகைப்படம் எடுத்துக்கொண்டு குடும்பத்தாரிடம்ஒப்படைக்கவேண்டும். தன்னார்வலர்கள் தினசரி எடுக்கப்படும் தகவல்களை ஊரக பகுதிக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் மற்றும்நகரப்பகுதிக்குபகுதி அளவிலான கூட்டமைப்பிற்கும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இக்கணக்கெடுப்பின் மூலம் இதுவரை மக்கள் பெற்ற பயன்கள், அரசு நலத்திட்டங்களில் மிகவும் பயனுள்ளதாக கருதும் மூன்றுதிட்டங்கள் தங்களது குடும்பத்தின் மேம்பாட்டிற்கு 2030 ஆம் ஆண்டிற்குள் அரசு பூர்த்தி செய்ய வேண்டிய முதன்மையான மூன்று தேவைகளையும் குறிப்பிடவேண்டும்எனதெரிவித்தார். தொடர்ந்து, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் என்ற ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் "உங்க கனவ சொல்லுங்க" விண்ணப்பவத்தினை வீடு வீடாக சென்று வழங்கும் தன்னார்வலர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிர காஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார். அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்த குமார், மகளிர் திட்ட அலுவலர் மலர்விழி உட்படதுறைசார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் நடத்தப்பட்ட

## "களமாடு" என்னும் கலை நிகழ்ச்சியில் பங்கேற்று போட்டியில் வெற்றி பெற்ற சமூக நீதி கல்லூரி விடுதி மாணவ மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (09.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் நடத்தப்பட்ட "களமாடு" என்னும் கலை நிகழ்ச்சியில் பங்கேற்று போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பேசும்போது தெரிவித்ததாவது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் செயல்படும் அனைத்து சமூக நீதி கல்லூரி விடுதிகளிலும் கலை மற்றும் விளையாட்டு ஆகியவற்றில் மாணாக்கருக்கு உள்ள தனித்திறமையை கண்டறிந்து அவற்றுக்கு தேவையான பயிற்சி வழங்கிட ஏதுவாக மாணாக்கர்களின் தனித்திறமையை வெளிப்படுத்தும் விதமாக "களமாடு" எனும் பெயரில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.



தந்தை பெரியார் பிறந்த தினமான செப்டம்பர் 17-ஆம் நாள் சமூகநீதி நாளாக கொண்டாடும் விதமாக அனைத்து சமூகநீதி கல்லூரி விடுதிகளுக்கும் கலை நிகழ்ச்சிகளை நடத்திட பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு 17.09.2025 அன்று அனைத்து கல்லூரி விடுதிகளிலும் துவக்கி வைக்கப்பட்டது.



தென்காசி இ. சி. ஈ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் "உங்க கனவ சொல்லுங்க" திட்ட அரசு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஏ. கே. கமல் கிஷோர் இ. ஆ. ப. அவர்கள் திட்டத்தின் அடையாள அட்டை வழங்கினார் விழாவில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ் பழனி நாடார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சதன் திருமலை குமார், ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், மாணவ/மாணவியர்கள் போட்டியில் பங்கேற்பதற்கு 23.09.2025 வரை பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 11.10.2025 அன்று ஈரோடு மாவட்டத்தில் உள்ள 5 சமூகநீதி கல்லூரி விடுதிகளில் பொறுப்பாளர்கள் மேற்பார்வையில் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது.

நேற்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம், ரங்கம்பாளையம், அரச்சலூர், ஈரோடு ஆகிய பகுதிகளில் செயல்படும் 5 சமூக நீதி கல்லூரி விடுதி மாணவ மாணவியர்களுக்கு "களமாடு" எனும் பெயரில் நடத்தப்பட்ட பாட்டுப்போட்டி, கோலப்போட்டி,தனிநபர் நடிப்பு, குழு நடனம், பேச்சுப்போட்டி, சதுரங்க விளையாட்டு, எறிபந்து. உள்ளிட்ட 17 வகையான போட்டிகளில் வெற்றி பெற்ற 143 மாணவ, மாணவியர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மகேஸ்வரி. மக்கள் சிந்தனைப்பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழர் திருநாளை முன்னிட்டு பொங்கல் பரிசு தொகுப்பினை சென்னையில் தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து விருத்தாசலம் அடுத்த மு.பட்டி ஊராட்சியில் தமிழக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தொடங்கி வைத்தார். இதில் குடும்ப அட்டைத்தாரர்களுக்கு ஒரு கிலோ பச்சை அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு ஆகிய பொங்கல் தொகுப்புடன் ரூ.3000 ரொக்கம் வழங்கினார். விருத்தாசலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கனக. கோவிந்தசாமி தலைமை தாங்கினார். வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பட்டி.சு வசந்தகுமார் வரவேற்புரை கூறினார். மாவட்ட வருவாய் அலுவலர் புண்ணியகோடி, மாவட்ட வட்ட வழங்கல் அலுவலர் செல்வி.சவிதாஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன், விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் மு.குலோத்துங்கன் கழக மாநில கலை இலக்கிய அணி துணை செயலாளர் வி.டி..கலைச்செல்வன், விருத்தாசலம் நகர செயலாளர் க.தண்டபாணி ஒன்றிய கழக செயலாளர்கள் தி.வேல்முருகன், பழனி.சுரேஷ், ஆசைதம்பி, ஒன்றிய துணை செயலாளர் தர்ம. மணிவேல் கடலூர் மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சதீஷ் குமார்,காங்கிரஸ் வட்டார தலைவர் ராவணன் மற்றும் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள் மற்றும் ஊர் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் (08.01.2026) அன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலை, பசுவபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அம்மாபாளையம் நியாயவிலை கடையில் பயனாளிகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.3,000 ரொக்கமாக வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், சென்னிமலை பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி உட்பட பலர் உள்ளனர்.

## ஈரோடு மாவட்டம், சென்னிமலையில்

# அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 271 பயனாளிகளுக்கு விலையில்லா இணைய வழி வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார்



ஈரோடு மாவட்டம், சென்னிமலை, பி.எஸ்.ஏ.மஹாலில் (08.01.2026) அன்று நடைபெற்ற விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 271 பயனாளிகளுக்கு விலையில்லா இணைய வழி வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது

அந்த வகையில் இன்றைய தினம் மணிமலைக்கரடு மக்களுக்கு நீண்ட நாள் கோரிக்கையாக ஏற்று இ-பட்டாக்களை வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற வீட்டு மனை பட்டாக்கள், புதிய பட்டாக்கள் என்கிற வகையில் ஏறத்தாழ 4000 பட்டாக்கள் இப்பகுதிகளுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. இப்பட்டாக்கள் ஆன்லையில் பதிவுவேற்றம் செய்யப்பட்டு அந்த பட்டாக்களை எளிதில் தரவிறக்கம் செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் மணிமலைக்கரடு பகுதியை சேர்ந்த 271 பயனாளிகளுக்கு விலையில்லா இணைய வழி வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார்.

தொடர்ந்து சென்னிமலை,, பசுவபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அம்மாபாளையம், நியாயவிலைக்கடையில் பயனாளிகளுக்குபொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.3000 வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் சென்னிமலை பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி, பெருந்துறை வட்டாட்சியர் ஜெகநாதன், சென்னிமலை வட்டார வளர்ச்சி அலுவலர் பாலசுப்பிரமணியம், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, (09.1.2026) நேற்று ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழில் பூங்காவில் மாபெரும் தூய்மைப்பணியை தொடங்கி வைத்து, பார்வையிட்டார். உடன் செயற்பொறியாளர் ( சிப்காட், சென்னை) திருவருள் உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோட்டில் 479 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டு மனை பட்டாக்களை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அனைத்து மகளிரும் பயன்பெறும் வகையில் கட்டணமில்லாவிடியல் பயணம், உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி திட்டம், இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் மகளிர் உரிமைத்திட்டம், மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிடும் வகையில் உங்களுடன் ஸ்டாலின். மக்களின் நலனை காக்கும் வகையில் மக்களை தேடி மருத்துவம் மற்றும் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம். முதியோர்களுக்கான அன்புச்சோலை திட்டம், மலையிலிருந்து வரும் நீரை பொதுமக்களுக்கும் விலங்களுக்கும் பயன்பெறும் வகையில் அந்தியூர் தோனிமடுவு திட்டம், உயர்கல்வி செல்லும் மாணவ மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டம், 60 ஆண்டுகளாக மின் இணைப்பு இல்லாத கத்திரி மலைக்கு மின் இணைப்பு வழங்குதல், பள்ளி குழந்தைகளுக்கு சோர்வின்றி கல்வி பயில முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம். குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல்பரிசு தொகுப்புடன் ரொக்கம் ரூ.3000/ வழங்கும் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் போன்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டு மனைப்பட்டா வழங்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் இத்தகைய அரசு நலத்திட்டங்களை பெற்று பயனடைய வேண்டும் என தெரிவத்தார்.

வீட்டுவசதி. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மேல் திண்டல் மற்றும் வில்லரசம்பட்டி பகுதியை சேர்ந்த 479 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி,ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, ஈரோடு பி. கே.பழனிசாமி,சசிக்குமார்,ஈரோடுமாநகராட்சி மண்டலக்குழுத்தலைவர்கள் வருவாய் வட்டாட்சியர் முத்துக்கிருஷ்ணன், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





தேமுதிக சார்பில் கடலூர் மாவட்டம் வேப்பூரில் நடைபெறும் "மக்கள் உரிமை மீட்பு மாநாடு 2.0" மாநாட்டிற்காக, ஈரோடு மாநகர் மாவட்ட அக்ரஹாரம் பகுதி கழகத்தின் சார்பாக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெரும் திரளாகப் புறப்பட்டுச் சென்றனர். தேமுதிக மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.ஆனந் அவர்களின் ஆலோசனைப்படி, பி.பெ. அக்ரஹாரம் பகுதி கழகச் செயலாளர் பெருமாள் இதற்கான விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இந்த மாநாட்டுப் பயணத்தில் அக்ரஹார பகுதிக்கு மாநாட்டுப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட கேப்டன் செல்வராஜ் உட்பட 70க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஈரோட்டில் இருந்து உற்சாகத்துடன் கிளம்பினர். பயணத்தின் போது, மறைந்த கேப்டன் நினைவாக மாநாட்டிற்குச் செல்லும் பெண் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஆட்டம் பாட்டத்துடன் மிகுந்த எழுச்சியுடன் சென்றது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (09.1.2026) ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக்கிடங்கில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிபிரதிநிதிகள் முன்னிலையில் பெல் நிறுவனபொறியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதற்கட்ட சரிபார்ப்பு பணி நிறைவடைந்ததையொட்டி மாதிரி வாக்குப்பதிவு நடைபெற்று வருவதை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.




தூத்துக்குடி மாவட்டம், மீளவிட்டானில் பகுதியில் மாசு இல்லாத மாவட்டமாக உருவாக வேண்டும் எதி'கால தலைமுறையினா' நலன் கருதி தூய்மையான சுகாதாரமான வாழ்வாதாரம் அனைவருக்கும் அமைய வேண்டும். என்ற அடிப்படையில் தூத்துக்குடி அருகேயுள்ள மீளவிட்டானில் உள்ள சிப்காட் அலுவலக வளாகத்தில் இருந்து சிப்காட் பகுதி முழுவதையும் தூய்மைப்படுத்தும் "மாபெரும் தூய்மைப் பணியினை" மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் இன்று துவக்கி வைத்து தூய்மை பணிகளை மேற்கொண்டு மாவட்டத்திற்கு முன் உதாரணமாக செயல்பட்டா' என்பது குறிப்பிடதக்கது. நிகழ்ச்சியில் அரசு அதிகாரிகள் மற்றும் செய்தி மக்கள் தொடா'பு அலுவலா' நவீன்பாண்டியன், உள்பட பலர் உடனிருந்தனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.